# சுயமரியாதைச் சங்கக் கூட்டம்.

---

## ஸ்டாலின் ஜெகதீசுக்குப் பாராட்டு.

ஜயங்கொண்டாபுரம், மே 30.

நேற்று மாலை இவ்வூர் சுய மரியாதைச் சங்கத்தில் தோழர் அ. பெ. பழனி செட்டியார் அவர்கள் தலைமையில் கூடிய கூட்டத்தில் ஹிந்தி எதிர்ப்புச் சத்தியாக்கிரகத்திற்காக அச் சங்க சார்பில் ஒரு நிதி திரட்டவும், தமிழருடையவும், தமிழ் மொழி, கலை முதலியனுடைய வும் பாதுகாப்பிற்காக உண்ணா விரதமிருக்கும் வீரத்தியாகி ஸ்டாலின் ஜெகதீசைப் பாரா ட்டுவதாகவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன வென்று ஷை சங்கக்காரியதரிசி அறிவிக் கிறார்.

---